“தமிழ் எங்கள் உயிருக்கு நேர்”

# தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து

# Tamil Education Service Switzerland

# பொதுத்தேர்வு 2020

# தமிழ்மொழி ஆண்டு 11

**நேரம்: 150 நிமிடம்**

**சுட்டெண்:** ____________________

## பகுதி - 1

**1. மிகப்பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.**

1. வல்லினமெய்யெழுத்துத் தொகுதி
   1. ங் ஞ் ண் ந் ம் ன்
   2. க் ச் ட் த் ப் ற்
   3. ய் ர் ல் வ் ழ் ள்
2. ஸ்கன்டினேவிய நாடுகள் அமைந்துள்ள கண்டம்
   1. ஆசியா
   2. ஆபிரிக்கா
   3. ஐரோப்பா
3. எழுபத்தைந்தாவது ஆண்டுநிறைவில் கொண்டாடப்பெறும் விழா
   1. வெள்ளிவழா
   2. மணிவிழா
   3. பவளவிழா
4. புலவர் எனும் பெயர்ச்சொல் புலவீர் என விளிக்கப்படும்போது ஏற்படும் மாற்றம்
   1. ஈறு திரிதல்
   2. ஈறு குன்றல்
   3. ஈற்றயல் திரிந்து நீளல்
5. ‘கணக்காயர் இல்லாத ஊரும் …’ இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல்
   1. திரிகடுகம்
   2. ஐந்திணை ஐம்பது
   3. இனியவை நாற்பது
6. உயிரீற்றுப்புணர்ச்சி பெற்றுவந்த சொல்
   1. தாயன்பு
   2. வெண்ணீறு
   3. காலையுணவு
7. உயர்திணை இருபாற்பொதுப்பெயராக அமைவது
   1. ஞானி
   2. சிறுமி
   3. தனயன்
8. விளம்பரங்களைச் சுவரில் ஒட்டாதீர். இவ்வாக்கியத்தின் எழுவாய்
   1. நீ
   2. யான்
   3. நீவிர்
9. வருத்தி வேலை வாங்குதல் என்னும் பொருள் தரும் மரபுத்தொடர்
   1. கசக்கிப்பிழிதல்
   2. கட்டியடித்தல்
   3. காதுகுத்துதல்
10. யானை மேய்ப்பவன் இடையன். இதில் வந்துள்ள வழு
    1. மரபுவழு
    2. எண்வழு
    3. திணைவழு

| 1 | 2 | 3 |
|---|---|---|
| ☐ | ☐ | ☐ |

1 2 3

11. ‘கொற்றச்சோழர் கொங்கர்ப் பணீஇயர்’ இப்பாடலடியில் அளபெடை பெற்று வந்துள்ள சொல்
    1. கொற்ற
    2. கொங்கர்
    3. பணீஇயர்

12. சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும் இன்பம் தரும். மறுமை என்பதன் எதிர்ப்பொருட்சொல்
    1. உண்மை
    2. நன்மை
    3. இம்மை

13. தாத்தா வெற்றிலை நட்டுத் தண்ணீர் ஊற்றினார். இதில் வந்துள்ள ஆகுபெயர்
    1. இடவாகுபெயர்
    2. சினையாகுபெயர்
    3. பொருளாகுபெயர்

14. கடலும் கடல்சார்ந்த நிலத்தைக் குறிப்பது
    1. குறிஞ்சி
    2. முல்லை
    3. நெய்தல்

15. மோப்பக் குழையும் அனிச்சம். இதில் குழையும் என்பதன் பொருள்
    1. மலரும்
    2. வாடும்
    3. உதிரும்

16. பன்னாட்டுத் தாய்மொழிகள் தினமாகக் கொண்டாடப்பெறுவது
    1. மே 8ஆம் நாள்
    2. பெப்ரவரி 21ஆம் நாள்
    3. நவம்பர் 20ஆம் நாள்

17. ஆய்த எழுத்தின் பிறப்பிடம்
    1. மார்பு
    2. உச்சி
    3. கழுத்து

18. மேடையில் நடனமாடும் அச்சிறுமியின் அழகைக்கண்டு அவையோர் வியந்தனர். இதில் புறச்சுட்டாக அமைவது
    1. அவையோர்
    2. அழகு
    3. அச்சிறுமி

19. பன்னாட்டுநிலையில் தொழில்வாய்ப்புகளைப் பெற அனுபவமும் ஒரு பிரதான காரணமாக விளங்குகின்றது. அனுபவம் என்பது
    1. திறமை
    2. பட்டறிவு
    3. கல்வித்தகைமை

20. ‘முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்’ என்பதற்கு ஒப்பான பழமொழி
    1. சாணேற முழம் சறுக்கும்
    2. எறும்பூரக் கற்குழியும்
    3. ஆறினகஞ்சி பழங்கஞ்சி

1 2 3

21. கவிதைகளில் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது
    1. எதுகை
    2. மோனை
    3. முரண்

22. துரியோதனனின் சபையில் பாஞ்சாலி வெஞ்சினத்துடன் சபதம் செய்தாள். இதில் வெஞ்சினம் என்பதில் வந்துள்ள தொகை
    1. வினைத்தொகை
    2. பண்புத்தொகை
    3. அன்மொழித்தொகை

23. இயற்கை அழிவினால் பாதிக்கப்பெற்ற மக்களுக்கு இளையோர் முன்வந்து உதவினர். இளையோர் என்பதன் எதிர்ப்பொருட்சொல்
    1. முதியோர்
    2. முன்னோர்
    3. சான்றோர்

24. குழந்தைகளின் மழலைச்சொல் கேட்டு இன்புறுவோம். இதில் குழந்தையைக் குறிக்காத சொல்
    1. சேய்
    2. மகவு
    3. கிழவி

25. தோல் போர்த்த எலும்புக்கூட்டைத் தூக்கி நடக்கச் சக்தியின்றி முள்வேலிக்குள் சின்னஞ்சிறிய குழந்தைகளும் சிக்கித் தவித்தனர். இதில் சின்னஞ்சிறிய என்பது
    1. இணைமொழி
    2. அடுக்குமொழி
    3. அடுக்கிடுக்குமொழி

26. எம்மில் கீழோர் மேலோர் என்பதிலர். இவ்வாக்கியம்
    1. உடன்பாட்டுவாக்கியம்
    2. வினாவாக்கியம்
    3. எதிர்மறைவாக்கியம்

27. சொல்லின் இறுதியில் வராத எழுத்துகள்
    1. க் ச் ட்
    2. ண் ம் ன்
    3. ய் ர் ள்

28. மரத்தில் பழுத்த பழங்களைக் கண்டு புள்ளினங்கள் மகிழ்ச்சியுடன் ஆர்ப்பரித்தன. புள் என்பது
    1. பழம்
    2. பறவை
    3. காய்

29. கமக்காரன் நிலத்தை மண்வெட்டியால் கொத்தினான். இதில் காரணப்பெயராக அமைவது
    1. மண்வெட்டி
    2. நிலம்
    3. கொத்தினான்

30. வீட்டிற்கு வருவோரை வரவேற்றல் தமிழர் பண்புகளுள் ஒன்றாகும். இதில் வந்துள்ள வினையாலணையும் பெயர்
    1. வரவேற்றல்
    2. வருவோர்
    3. தமிழர்

(30×1=30 புள்ளிகள்)

**2. சேர்த்தெழுதுக.**

1. மண் + குடம் = ______________________________
2. செம்மை + கதிர் = ______________________________
3. கல் + பாறை = ______________________________
4. தேன் + அருவி = ______________________________
5. பத்து + பாட்டு = ______________________________
6. மேற்கு + திசை = ______________________________

(6×1=6 புள்ளிகள்)

**3. பிரித்தெழுதுக.**

1. பூச்செண்டு = ____________________ + ____________________
2. ஏழ்கடல் = ____________________ + ____________________
3. ஈற்றுயிர் = ____________________ + ____________________
4. மரக்கால் = ____________________ + ____________________
5. சித்திரக்குன்றம் = ____________________ + ____________________
6. அறிவியல் = ____________________ + ____________________

(6×1=6 புள்ளிகள்)

**4. விருந்தோம்பல் என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

________________________________________________________________________

(4 புள்ளிகள்)

**5. சிறுகுறிப்பு எழுதுக.**

1. சொற்பொழிவு

2. கலைச்சொல்லாக்கம்

(2x2=4புள்ளிகள்)

**6. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. ஆறுமுகநாவலர் அச்சிட்டு வெளியிட்ட நூல்கள் இரண்டு எழுதுக. (1 புள்ளி)

2. ஒரு நாட்டின் தொழில்வாய்ப்புகளைத் தீர்மானிப்பவை எவை? (1 புள்ளி)

3. பல்லவர், பாண்டியர் காலத்தில் தோற்றம் பெற்ற பக்திசாரா இலக்கியங்கள் எவை? (1 புள்ளி)

4. உரிச்சொல் என்றால் என்ன? மிகுதி எனும் குணத்தை உணர்த்தும் உரிச்சொற்கள் நான்கினைத் தருக. (1 புள்ளி)

5. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஆறு தருக. (2 புள்ளிகள்)

6. வேற்றுமை என்றால் என்ன? ஐந்தாம் வேற்றுமையின் உருபுகளையும் பொருள்களையும் தருக.
(2 புள்ளிகள்)

7. பகுபத உறுப்புகள் ஆறினையும் எடுத்துக்காட்டுடன் விளக்குக. (2 புள்ளிகள்)

8. செய்வினை வாக்கியம் என்றால் என்ன? செய்வினை வாக்கியம் எவ்வாறு செயப்பாட்டுவினை வாக்கியமாக மாற்றமடைகிறது என்பதனை எடுத்துக்காட்டுடன் விளக்குக. (2 புள்ளிகள்)

**7. கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

யாயும் ஞாயும் யாராகியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக்கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல் நீர்போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந்தனவே.

1. இப்பாடல் இடம்பெற்ற நூல் எது? (1 புள்ளி)

2. இதில் எந்தை எனக் குறிப்பிடப்பெறுபவர் யார்? (1 புள்ளி)

3. இதில் இடம்பெற்றுள்ள உவமைத்தொடர் யாது? (1 புள்ளி)

___________________________________________

4. இப்பாடலிலிருந்து பின்வருவனவற்றைத் தருக.

1. சினைப்பெயர் ________________

2. எதுகை ________________

3. வினாவெழுத்துப் பெற்று வந்துள்ள சொல் ________________

4. குற்றியலுகரம் பெற்று வந்துள்ள சொல் ________________

(4x ¼= 1 புள்ளி)

5. இப்பாடலின் பொருளை உமது உரைநடையில் எழுதுக.

___________________________________________

___________________________________________

___________________________________________

___________________________________________

___________________________________________

(1 புள்ளி)

**8. அ. 'புன்னகை' என்ற தலைப்பில் எட்டுவரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.**

**அல்லது**

**ஆ. தொழிற்கல்வியைத் தொடங்குவதற்கு அனுமதி கோரி நிறுவனம் ஒன்றுக்கு விண்ணப்பக்கடிதம் எழுதுக.**

(4 புள்ளிகள்)

___________________________________________

___________________________________________

___________________________________________

___________________________________________

___________________________________________

___________________________________________

___________________________________________

___________________________________________

___________________________________________

**9. கீழ்க்காணும் தலைப்புகளுள் ஒன்றினைப்பற்றி 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

1. தாய்மொழிக்கல்வியின் அவசியம்
2. இளமையும் வெற்றிப்பாதையும்
3. வைரஸ் நோய்த்தாக்கமும் உலகநாடுகளின் பொருளாதாரமும் (9 புள்ளிகள்)

## பகுதி - 2

**1. கீழ்க்காணும் பந்தியைப் படித்து மூன்றிலொரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.**

அழகியற்கலைகள் பல. இசை, நடனம், சிற்பம், ஓவியம், இலக்கியம் முதலானவை அழகியற்கலைகளாகக் கொள்ளப்படுகின்றன. மனிதனிடம் இயல்பாகவுள்ள அழகியல் உணர்ச்சியின் வெளிப்பாடே அழகியற்கலை எனலாம். இக்கலை தனியொருவரது உள்ளத்திலிருந்தும் வெளிப்படலாம். அழகியற்கலையில் ஈடுபாடு கொள்வது, அதனை நயப்பது, மக்களின் உள்ளத்தைச் செம்மைப்படுத்துகின்றது. உணர்ச்சிநிலையை உயர்வடையச் செய்கின்றது. வாழ்க்கையைச் சுவையுடையதாக்குகின்றது. அழகியற் கலைகளுள்ளே இசையும் ஓவியமும் இலக்கியமும் ஆற்றல் மிக்கவையெனக் கருதப்படுகின்றன. இவற்றுள்ளும் இலக்கியக் கலையானது இசை, ஓவியம் என்னுமிரண்டிலும் ஆற்றல் மிக்கது. இலக்கியத்தின் வகைகள் எண்ணற்றவை. மனித அனுபவத்தின் எல்லாக் கூறுகளையும் இலக்கியம் எடுத்துக்காட்டுகின்றது. மனித இயல்பின் எல்லாப் பகுதிகளுக்கும் அது திருப்தியளிக்கின்றது. அவல நாடகங்கள் உள்ளத்தை உருக்கி உயர்வுபடுத்தும். நகைச்சுவை நாடகங்கள் மகிழ்ச்சியை நல்கும். அங்கத இலக்கியங்கள் மனித இனத்தின் மடமைகளையும் கொடுமைகளையும் எடுத்துக்காட்டிச் சினமூட்டி நீதிக்காக வாதாடும் நேர்மைத்திறத்தை நல்கும். இவ்வாறு இலக்கியப் புலவர்கள் படைக்கும் பாத்திரங்கள் பலவிதமானவை. பல்வேறு குணவியல்புகளைச் சித்தரித்துக் காட்டுபவை. இத்தகைய பாத்திரப்படைப்புகளை உணர்ந்து, அறிந்து அப்பாத்திரங்களிலே ஒன்றிக்கும்போது கலை அனைத்தும் அழகுபெற்று இன்பத்தைத் தந்து இன்கலையாக மிளிர்கின்றது.

(4 புள்ளிகள்)

**2. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

உலகில் இன்று மூவாயிரத்திற்கும் மேற்பட்ட மொழிகள் பேசப்பட்டு வந்தாலும் எழுத்து வடிவம் பெற்றவை முந்நூறுக்கும் குறைவானவையே என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். அவற்றுள் பழைமையும் இலக்கிய வளமும் கொண்டவை சிலவே. அவற்றைச் செம்மொழிகள் என அழைப்பர். தமிழ், கிரேக்கம், இலத்தீன், எபிரேயம், சீனம், சமஸ்கிருதம், பாரசீகம், அரபிக் ஆகியவை செம்மொழிகள் எனும் சிறப்புப் பெறுகின்றன. இவற்றில் சமஸ்கிருதம் மிகக் குறைவாகப் பேசப்படும் மொழியாகவும் கோயில்களில் வழிபாட்டு மொழியாகவும் பயன்படுகின்றது. தமிழ்மொழி பழைமைக்குப் பழைமையானதாகவும் புதுமைக்குப் புதுமையானதாகவும் விளங்குகின்றது. இன்றும் இடையறாத பேச்சுவழக்கிலும், எழுத்து வழக்கிலுமுள்ள உள்ள முதன்மையான மொழியாகும். “வானம் அளந்த தனைத்தும் அளந்திடும் வண்மொழி” என்று பாரதியாரால் பாராட்டப்பெற்ற தமிழ்மொழி உயர்தனிச் செம்மொழியாக சிறப்புப் பெற்றுள்ளது. இது மனிதன் முதலில் பேசிய மொழியாக பிறமொழிகளின் துணையின்றித் தனித்து இயங்கும் வல்லமை பெற்றது. சிறந்த இலக்கிய இலக்கண வளங்களைப் பெற்றது. தமிழ்மொழியின் பழைமையை உணர்த்துவன தொல்காப்பியமும், சங்க இலக்கியங்களுமாகும். இந்நூல்களிலிருந்து தமிழ்மொழியின் பேச்சு, எழுத்து வழக்குகளின் சிறப்புகளும் பண்டைத்தமிழரின் நாகரிக பண்பாட்டுச் சிறப்புகளும் அறியப்பெறுகின்றன. இதில் தொல்காப்பியம் மிகவும் தொன்மையானது. தொல்காப்பியத்தை இயற்றியவர் தொல்காப்பியர். தொல்காப்பியம் தமிழ்மொழியின் பெருமையை விளக்குவதுடன் வாழ்க்கையை அகம், புறம் எனப்பிரித்து இலக்கியம் படைப்பதற்கு இலக்கணம் வகுத்துத் தந்த பெருமைக்குரியது.

1. தமிழ்மொழியின் சிறப்பை பாரதியார் எவ்வாறு பாராட்டுகின்றார்?

____________________

2. கோயில்களில் வழிபாட்டுமொழியாகப் பயன்படுகின்ற மொழி எது?

____________________

3. செம்மொழிகளாகச் சிறப்புப்பெற்ற மொழிகள் எவை?

____________________

____________________

4. தமிழின் பழைமையை உணர்த்தும் நூல்கள் எவை?

____________________

5. இந்நூல்களில் இருந்து அறியப்பெறுவன யாவை?

____________________

____________________

6. தொல்காப்பியத்தை இயற்றியவர் யார்?

____________________

(6X1=6 புள்ளிகள்)

**3. பொருத்தமான சொற்றொடரை வைத்து வாக்கியத்தை நிறைவு செய்க.**

| | | |
|---|---|---|
| சின்னாபின்னமாய் | அடியொற்றி | சகடக்கால் போல் |
| அமிழ்தினும் இனிய | ஆடை ஆபரணங்களை | கண்ணும் கருத்துமாய் |

1. ஈழத்தில் போரினால் பல ஊர்கள் ______________________________ ச் சிதைந்து கிடக்கின்றன.
2. தம் பிள்ளைகளைக் ________________________________ வளர்க்கும் கடமைப்பாடு பெற்றோருக்கு உண்டு.
3. நம் முன்னோர் வாழ்ந்து காட்டிய நல்லொழுக்க நெறிகளை ___________________ நாமும் வாழப் பழகவேண்டும்.
4. எல்லோர் வாழ்விலும் இன்பமும் துன்பமும் ______________________ வந்துபோகும்.
5. மாணவர்களாகிய நாம் _________________________ எம் தாய்த் தமிழ்மொழியினை விரும்பிக்கற்று உயர்வடைவோம்.
6. ஒவ்வோர் இனத்தவரும் தத்தமது தேசிய நாள்கள், பண்பாட்டு விழாக்களில் தமக்கேயுரிய _________________________ அணிந்து பண்பாட்டு அடையாளங்களை வெளிப்படுத்துவார்கள்.

(6×1=6 புள்ளிகள்)

**4. கீழ்க்காணும் உரைப்பகுதிகளுள் உமக்குத்தெரிந்த மொழியிலுள்ள உரைப்பகுதியைப் படித்து அதன் தமிழாக்கத்தை எழுதுக.**

**Deutsch:**

Die Einkaufstüten aus Polyethylen müssen bei der Verwendung reduziert werden, um dadurch einen Beitrag für den Umweltschutz zu leisten. Täglich finden die Plastiktüten Gebrauch in unserem Alltag. Weil diese von uns verantwortungslos weggeworfen werden, verschmutzen wir die Umwelt. Jeder und jede sollte versuchen dies zu vermeiden. Zudem müssen wir Acht geben, dass die Umgebung sauber gehalten, Bäume gepflanzt und die Bäume geschützt werden. Das Einpflanzen von neuen Bäumen an Kinder- und Erwachsenen-Geburtstagen sollten zur Gewohnheit gemacht werden, durch das Einpflanzen der Bäume profitieren wir und zeitgleich kann dadurch die Umwelt geschützt werden.

"Lasst uns die Umwelt pflegen und glücklich leben".

**French:**

Nous devons réduire l'utilisation de sacs en polyéthylène connus sous le nom de sacs de courses et travailler ensemble pour protéger l'environnement. Nous utilisons quotidiennement des sacs en polyéthylène pour nos besoins. En les jetant à l'extérieur de manière irresponsable, cela provoque une pollution de l'environnement. Nous devons tous travailler pour l'éviter. De plus, tout en maintenant l'environnement pur, nous devons tous accorder plus d'attention à la plantation des arbres et à leur culture. Si l'on prenait l'habitude de planter des arbres lors des fêtes d'anniversaires des enfants et des adultes, en plus de pouvoir en bénéficier, nous pourrons également protéger l'environnement.

"Prenons soin de l'environnement et vivons en bonne santé"

**Italy :**

Bisogna ridurre l'uso di sacchetti di polietilene noti come borse della spesa e collaborare per la protezione dell'ambiente. Usiamo quotidianamente sacchi di polietilene per le nostre necessità. Gettandoli all'aperto in modo irresponsabile si causa l'inquinamento dell'ambiente, contro il quale tutti noi dovremmo impegnarci per evitarlo. Inoltre, dobbiamo tutti prestare maggiore attenzione nella coltivazione delle piante e nel loro mantenimento. Tramite la pratica di coltivare delle piante in occasione di compleanni di bambini e adulti, oltre a trarne vantaggio noi stessi possiamo proteggere l'ambiente circostante.

"Prendiamoci cura dell'ambiente e viviamo in buona salute"

(4 புள்ளிகள்)

| பணியகப் பயன்பாட்டிற்கு: | | | |
|---|---|---|---|
| விடைத்தாள் மதிப்பீடு | முழுப்பெயர் | கையொப்பம் | மொத்தப்புள்ளி |
| முதலாம் முறை | | | |
| இரண்டாம் முறை | | | |
| இறுதிப்புள்ளிகள் | | | |